திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள குலசேகரன் கோட்டை என்ற இடத்தில் பண்டையக்காலச் சிறப்பு மிக்க ஒரு கோட்டை புதையுண்டு இருப்பதாக அந்த வட்டாரத்து மக்கள் கூறுகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சித் துறை மூலமாக இதை ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுவரையில் அதுபற்றிய குறிப்புகள் அரசாங்கத்திற்கோ, புதைபொருள் ஆராய்ச்சித் துறைக்கோ வரவில்லை. புதைப்பொருள் ஆராய்ச்சித்துறையினர் முறைப்படி பல்வேறு இடங்களை ஆராய்ந்து வருகிறார்கள். இதற்கு முக்கியத்துவம் தருகிறார்களா என்பது ஆராய்ச்சித் துறையினரைச் சார்ந்த விஷயம். அவர்களுடைய கவனத்திற்கு வேண்டுமானால் அரசாங்கம் இதைக் கொண்டு வரலாம்.

கல்விராயன்மலையிலுள்ள பள்ளி

*402 வினா.—**திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்விராயன்மலையில் இருந்த ஓராசிரியர் பள்ளி 1967-க்கு முன்பே மூடப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை மீண்டும் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்விராயன்மலையில் பள்ளியில் சேரவேண்டிய பிள்ளைகள் போதுமான அளவு இருந்து, புதிய பள்ளிகள் திறக்கத் தேவையான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடமிருந்து பள்ளிக்கல்வி இயக்குநருக்கோ அல்லது அரசுக்கோ வந்தால் அவை பரிசீலிக்கப்படும்.

மாவட்ட வளர்ச்சி மன்றத் தலைவர்

*403 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சிக் குழுவின் தலைவராக இருப்பதன் காரணமாக, கூட்டங்களிலே எதாவது விளக்கம் கேட்டால் சிறு விளக்கம்தான் கொடுக்கப்படுகிறதே தவிர செய்ய வேண்டிய வேலைகளைப் பரிசீலனை

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1971 டிசம்பர் 15]

செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களையோ அல்லது வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரையோ தலைவராகத் தேர்ந்தெடுத்தால் நல்லதாக இருக்கும். அரசு இதைப் பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிப் பலதடவைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனல் அதிகமான பலன் ஏற்படாததால், மாவட்ட ஆட்சித் தலைவரே தலைவராக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. சாதாரணமாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற நிலைமை இல்லை. இதில் கொள்கைப் பிரச்சினையோ, குறிக்கோள் பிரச்சினையோ இல்லை. மாவட்டத்தின் வளர்ச்சி அத்தனையையும் ஒருசேரக் கவனித்து, பல்வேறு துறை அதிகாரிகளைக் கொண்டு முடிவு எடுக்கப்பட வேண்டும். ஆங்காங்கே ஏற்படுகின்ற சிக்கல்களைப்பற்றி விவாதிக்கவும், பல்வேறு பகுதிகளிலே என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி விவாதிக்கவும், தக்க பரிகாரம் காணவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருந்தால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும். வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகளை நடைமுறைப் படுத்துகின்ற பொறுப்பு தலைவருக்கு வருகிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்குத் தலைவராக இருப்பது நல்லது. மேலும், வேறு ஒருவர் இந்தக் கூட்டத்திற்குத் தலைவராக இருந்து, கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துகிறபோது, அந்த முடிவுகளை யார் நடைமுறைப்படுத்துவது என்ற சிக்கல்கள் ஏற்படும். மேலும் வேறொருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால் அவர் ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தால், அதனல் கட்சி மாச்சரியங்கள் ஏற்படலாம். செய்யப்படுகின்ற காரியங்கள் எல்லாம் கட்சியின் அடிப்படையில் செய்யப்படுகின்றன என்ற புகார் வரலாம். இதனல் கட்சிமாச்சரியங்கள் வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் நடுநிலைமை வகிக்கக் கூடியவர். எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. நடுநிலைமை வகித்து கட்சி மாச்சரியங்களுக்கு ஆளாகாமல் பணிகளைச் செம்மையாக ஆற்ற முடியும். கட்சி மாச்சரியங்கள் ஏற்படுகின்ற போது மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் நோக்கமே செயல்பட முடியாமல் போய்விடலாம். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் தலைவராக இருப்பது சரியானது. அவர் இருப்பதால் எந்தவிதமான தகராறும் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் குறித்து மிக விளக்கமாகப் பதில் சொல்லிவிட்ட காரணத்தால், இதற்கு மேலும் துணைக் கேள்விகள் தேவையில்லை.